**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 317/2024**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வள்ளியம்மை | தொழில் | |
| க/பெ | தேவநாதன் | வயது | |
| ஊர் | | தேதி | 08.10.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (08.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

எனக்கு எழுத படிக்க தெரியும். 1வது பிரதிவாதி தேவநாதன் என்பவர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் 1996 ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் எனக்கு தெரியாது . 1 மற்றும் 3 வது பிரதிவாதிகளின் திருமணத்தின் பயனாக இரண்டாவது பிரதிவாதி பிறந்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது . இந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரி. வழக்குரையில் 1வது பத்தியில் மற்றும் 3 வது பிரதிவாதிகளின் திருமணத்தின் பயனாக இரண்டாவது பிரதிவாதி பிறந்துள்ளார் என்றும் பின்னர் 1 மற்றும் 3 பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேற்படி விவரங்கள் எனக்கு முன்னரே தெரியும் என்றால் இல்லை. மேற்சொன்ன விவரம் எனக்கு 2009 ம் வருடம் தெரியவந்தது . அதன் பிறகு என்னை 1வது பிரதிவாதி ஏமாற்றிவிட்டது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை . 2003 ம் வருடம் முதல் தான் எனக்கு 1வது பிரதிவாதிக்கும்இடையே பழக்கம் ஏற்பட்டது என்று சொன்னால் 2007 ம் வருடம் தான் பழக்கம் ஏற்பட்டது . எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே குழந்தைபிறந்துள்ளது என்பதால் அவரது குடும்ப விஷயங்களை என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் இல்லை . எனக்கும் 1வதுபிரதிவாதிக்கும் உள் ளபழக்க வழக்கத்தின் காரணமாக தான் வாதி பிறந்துள்ளார் என்றால் சரி . 2007 ம் வருடம் 1வது பிரதிவாதி கோலியனுர் கிராமத்தில்

அதாவது இந்த வழக்கில் 4 வது இன சொத்தினை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் இல்லை . எனக்கு 2024 ம் வருடம் தான் கிரையம் வாங்கிய விவரம் தெரியவந்தது . 2007 ம் வருடத்திற்கு பிறகு மகேஸ்வரி என்பவருடன் 1வது பிரதிவாதி இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது .1 வது பிரதிவாதி தாவா 4 வது இன சொத்தினை 4 வது பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் எனக்கு தெரியாது . வழக்குரையில் 3 வது பத்தியில் தாவா 4 ம் இன சொத்தினை 1ம் பிரதிவாதி 2 வது பிரதிவாதியின் நலனுக்காக கடந்த 13.09.2012 ல் 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்ற விவரம் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. 2003 ம் வருடத்திற்கு 1 வது பிரதிவாதி எங்கிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி. 2007 ம் வருடத்திற்கு 1 வது பிரதிவாதி எங்கிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடன் தான் இருந்தார் . 2009 ம் வருடம் சொத்தினை கிரையம்வாங்கிய விவரமும் பின்னர் குடும்ப நலனுக்காக 2012 ம் வருடம் 4 ம் பிரதிவாதிக்கு தாவா 4 வது இன சொத்தினை கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் இல்லை. தாவா 1 முதல் 3 இன சொத்தானது 1 வது பிரதிவாதிக்கும் அவரது சகோதரருக்கு இடையே ஏற்பட்ட பாகபிரிவினை வாயிலாக சி அட்டவணை சொத்தாக கிடைக்கப்பெற்ற சொத்து என்று சொன்னால் சரி . அது பூர்வீக சொத்து. தாவா 4 வது இன சொத்து வீரபத்திரன் என்பவர் அனுபவித்து வருகிறார் என்றாலும் 1 முதல் 3 இன சொத்துக்கள் மட்டுமே தற்போது உள்ளது என்று சொன்னால்அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் 1வது பிரதிவாதிக்கு சட்டப்படியான மனைவி இல்லை என்று சொன்னால் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் மேற்சொன்ன விவரம்எனக்கு தெரியும் . எனக்கும் 1 வது பிரதிவாதிக்கும் பழக்கவழக்கத்தின் அடிப்படையில் பிறந்த இளவர் வாதி சட்டத்திற்கு முரணான வாரிசு என்று சொன்னால் சரியல்ல . சட்டத்திற்கு முரணான வாரிசு பூர்வீக சொத்தில் பாகம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல . வழக்கு சொத்தில் வாதிக்கு பாக உரிமை ஏற்பட வில்லை என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram